25-8-1991

★ இந்தியாவிற்கான பிரிட்டிஷ் தூதுவர் சொல்கிறார்

# காலிஸ்தான் அமைப்பு, புலிகளுக்கு எதிராக பிரிட்டிஷ் - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகும்

பக்கங்கள் நான்கு — விலை ரூபா: 5 - 00

முரசொலி

முரசு 05 ஒலி 264 பிரசோற்பத்தி ஆவணி 08 ( 24 - 08 - 1991 ) சனி

லண்டனில் உள்ள விடுதலைப்புலிகள், பஞ்சாப் காலிஸ்தான் விடுதலை அமைப்பு ஆகியவற்றிற்கு எதிரான நடவடிக்கை குறித்து இந்தியாவும், பிரிட்டனும் ஒப்பந்தம் செய்யவுள்ளன. நேற்று சென்னையில் செய்தியாளர்களிடையே பேசிய இந்தியாவிற்கான பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் புல்டோல் இத்தகவலை வெளியிட்டார். புதிதாக தயாராகும் இவ்வொப்பந்தத்தின்படி லண்டனில் உள்ள இவ்வமைப்புகளின் சொத்துகளை பறிமுதல் செய்யவும், வங்கிச் சொத்துக்களை பரிசீலிக்கவும் வழிசெய்யப்படும் எனவும் அத்தூதுவர் தெரிவித்ததாக சென்னை செய்திகள் தெரிவித்தன, இவ்வொப்பந்தம் குறித்து ஆராயவென விரைவில் இந்தியக் குழு வொன்று லண்டன் செல்லும் எனவும் தூதுவர் டேவிட் புல்டோல் குறிப்பிட்டார்.

# மண்டைதீவில் திடீரென விமானங்கள் தாக்குதல்

## கடலில் குதித்து ஒருவர் மரணம், ஐவர் காயம், வாகனம் சேதம்

நீண்ட நாள்கள் இடைவெளிக்குப் பின்னர் நேற்று இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் யாழ் நகரை இரு தடவைகள் வட்டமிட்ட சிறிது நேரத்தில் மண்டைதீவுச் சந்தியில் குண்டுத் தாக்குதல்களை திடீரென மாறி மாறி மேற்கொண்டன.

நேற்று மாலை 2.10 மணியளவில் நடைபெற்ற இத் தாக்குதலில் அங்கு நின்ற பொதுமக்களில் ஐவர் படுகாயமடைந்தனர்.

ஒருவர் பொம்மர்த் தாக்குதலில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக கடலில் குதித்து நீந்த இயலாமல் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தார்

காயமடைந்த சுமதி (17) புங்குடுதீவு, பமிலா (04) புங்குடுதீவு, யாழினி (13) சாவகச்சேரி, ரி. சாந்தினி (26) வேலணை, எம். எட்வோட் (30) அல்லைப்பிட்டி ஆகியோர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## பாவனைக்கு உதவாத தேயிலை குடா நாட்டில் விற்பனை

பாவனைக்கு உபயோகப் படுத்தப்பட்ட தேயிலை யாழ் குடா நாட்டின் சில பகுதிகளில் விற்பனை செய்வது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இன்றைய நிலைமையை சாட்டாக வைத்து பாவித்த தேயிலைகளை உலரவைத்து பின்னர் அதனை டைக்கற்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் ஊழியர்கள் டாக்டர்களுக்கு மேலதிக கொடுப்பனவு இல்லை

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் மற்றும் சில ஊழியர்களுக்கு தை மாதத்திலிருந்து மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆனி மாதம் யுத்தம் ஆரம்பித்ததை தொடர்ந்து இவ்வைத்தியர்கள் மற்றும் சில ஊழியர்கள் முழு நேரம்

—04 ஆம் பக்கம் பார்க்க

## சுப்பிரமணியம் சுவாமிக்கு இப்படியும் ஓர் விருப்பமாம்!

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையும் பிரமுகரான கிட்டுவையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்தியா கோரவிருப்பதாக ஊர்ஜீத மற்ற செய்திகள் கூறுவதாக வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது.

இதேவேளை முன்னாள் அமைச்சர் சுப்பிரமணியம் சுவாமி இதை வரவேற்றுள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## பீரங்கித் தாக்குதலினாலே விமானங்கள் பெற்றோம்

"ஆனையிறவு போரில் விமானப்படைக்கு எதிராக விடுதலைப் புலிகள் 5000 அடி தாக்கு திறன் கொண்ட புதிய 20 எம். எம் பீரங்கிகளை உபயோகித்துள்ளனர் இதை கருத்திற்கொண்டே

04 ஆம்பக்கம் பார்க்க

## உயர்தர விசேட பரீட்சை வடக்கில் நடாத்த ஏற்பாடு

வடக்கில் தடைப்பட்ட க. பொ த. உயர்தர பரீட்சைக்கு பதிலாக விசேட பரீட்சை ஒன்றை நடாத்த பரீட்சை ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாக கொழும்புப் பத்திரிகை தெரி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## முரசொலி அறிவித்தல்

அச்சுத்தாள் இல்லாமையால் நாளை (25- 8- 91) தொடக்கம் முரசொலிப்பிரசுரம் தற்காலிகமாகநிறுத்தி வைக்கப்படுகிறது என்பதனை வாசகர்களுக்கு மிக்க மனவருத்தத்துடன் அறியத்தருகிறோம்.

அச்சுத்தாள் பெறும் வாய்ப்புக் கிட்டியதும் முரசொலி பிரசுரம் ஆரம்பமாகும்.

பொதுமுகாமையாளர்
முரசொலி

## வீரமரணம்

மட்டக்களப்பில் கடந்த 18 ஆம் திகதி காலை மன்ரேசா என்னும் பகுதியில் நடைபெற்ற மோதலில் சுசியன் (சு. செல்வகுமார் சின்ன ஊரணி) இயக்க உதவியாளர் கந்தப்பொடி சிவராசா (பிள்ளையாரடி) ஆகியோர் வீரமரணமடைந்தனர். கொடுவாமடு பகுதியில் 20ஆம் திகதி நடைபெற்ற மோதலில் ரிச்சர்ட் (செல்வ குணசந்திரன்) மற்றும் இரு இயக்க உதவியாளர்கள் வீரமரணமடைந்தனர்.

★ ★

கடந்த மாதம் 15ஆம் திகதி அன்று ஆனையிறவில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் கரிகாலன் (மாப்பானர் உதயகுமார் புத்தூர்) வீரமரணமடைந்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி அன்று வெற்றிலைக்கேணிப் பகுதியில் நடைபெற்ற உக்கிர மோதலில் கம்பன் (கனகராஜா சத்தியகுமார் மாதகல்) வீரமரணமடைந்துள்ளார்.

## ஆலய மரங்களும் தப்பவில்லை

நவாலி கனைாயோடை அம்மன் ஆலயப் பகுதியில் நெடுங்காலமாகவும் இயற்கையாகவும் வளர்ந்த மரங்கள் இப்போது அவ்வூர் மக்களாலும், அகதிகளாலும் விறகுக்காக அழிக்கப்பட்டுவருகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆலய பரிபாலனசபை இது பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறியும் அவர்கள் அலட்சியம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவ்மரங்கள் தொடர்ந்தும் அழிக்கப்பட்

--04 ஆம் பக்கம் பார்க்க

## சினைப்பர் தாக்குதல்

ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் உள்ளஇராணுவத்தினர் நேற்று மாலைஇடையிடையே "சினைப்பர்" தாக்குதலை மேற்கொண்டவண்ண மிருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

## சடலங்கள் பாதுகாப்பாக

பெங்களூர் புறநகர்ப்பகுதியில் மரணமடைந்த சிவராஜன், சுபா உள்ளிட்ட எழுவரின் சடலங்களும் பதப்பத்தி பெங்களூர் புனித யோவான் மருதுத்வக்கல்லூரி மருத்துவமனையில் வைக்கப்பட்டன.

## உயர் வகுப்புக்கு அனுமதி

புலோலி புற்றளை மகா வித்தியாலயத்தில் க. பொ த. உயர்தர கலைப் பிரிவு வகுப்பு ஆரம்பிக்க கல்வித் திணைக்களம் அனுமதிவழங்கியுள்ளது. (10)


# வெளிவாரி பட்டப்படிப்புகள் கல்வியாண்டு 1991/92

**இலங்கை பல்கலைக்கழகங்களின் பட்டப்படிப்பு நெறிகளுக்கான**

கலைமாணி B. A.
வணிகமாணி B. COM.
விஞ்ஞானமாணி B. Sc.

இதற்கான பட்டதாரி பட்டத்துக்கு A/L 3 பாடங்கள் சித்தி அடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். விவரங்களையும் விண்ணப்பங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளலாம். முடிவு திகதி 10 - 9 - 91. இதற்கான விரிவுரைகள் யாவும் 14 - 9 - 91ல் ஆரம்பமாகின்றன.

விவரங்களுக்கு
புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

08129



St. John's College, Jaffna
and
Chundikuli Girl's College, Jaffna.

# ADMISSION - 1992

1. பின்வரும் வகுப்புக்களில் மட்டும் வெற்றிடங்கள் உண்டு.
   ஆண்டு ஒன்று, ஆண்டு ஆறு, ஆண்டு பத்து
2. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 20. 09. 91
   அ) விண்ணப்பப்படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 2 9 91 முதல் 14 9.91 வரை பெற்றுக் கொள்ளலாம்.
   ஆ) எக்காரணங்கொண்டும் 14.9.91 க்குப் பின் விண்ணப்பப்படிவங்கள் கொடுக்கப்படமாட்டா.
   இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
   ஈ) 20.9 91 க்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டா.
3. விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இணைக்கப்படவேண்டும். பிழையாகவோ அன்றிப் பூரணமாகவோ நிரப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறுதவிர்ந்த ஏனைய நாள்களில் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை அவ்வக் கல்லூரிகளில் படிவமொன்றிற்கு ரூபா 50 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
5. வயதெல்லைகள்.
   அ) ஆண்டு ஒன்று - விண்ணப்பதாரி 01 2 86 க்கும்- 31 01 87 க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ) ஆண்டு ஆறு - விண்ணப்பதாரி 01. 02. 81 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்
   இ) ஆண்டு பத்து - விண்ணப்பதாரி 1. 2. 77 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
6. பிரவேசப்பரீட்சை
   ஆண்டு ஆறு, ஆண்டு பத்து ஆகிய வகுப்புக்களுக்கு 19.10.91 காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணம். அதிபர்கள்

08075


## சிறந்த வீரர்கள் தெரிவு

சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்டு வரும் டொனால்ட் வெற்றிக் கிண்ணத்திற்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் கடந்த வாரம் நடைபெற்ற கால் இறுதி ஆட்டங்களிற் சிறந்த வீரர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சென்றலைற்ஸ் எதிர் மல்லாகம் ஆர். டி. எஸ். ஆட்டத்தில் கே. சண்முகலிங்கம், ஜொலிஸ்ரார் எதிர் மானிப்பாய் பரிஸ் ஆட்டத்தில் கே.வீரசிங்கம், கிறால்கொப் பேஸ்எதிர் பருத்தித்துறை ஆட்டத்தில் ரீ. கணேஸ் குமார், ஜொனியன்ஸ் எதிர் கொக்குவில் ஆட்டத்தில் சி. சூரியகுமார். (16)

## கட்டாக்காலிகளை அழிக்க நடவடிக்கை

சங்கானை பட்டின பிரதேசத்திலுள்ள கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு சங்கானை பொது சுகாதாரப் பரிசோதகர் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

கடந்த பல மாதங்களாகக் கட்டாக்காலி நாய்கள் சங்கானை சந்தைப் பகுதியிலும், ஏனைய இடங்களிலும் பொது மக்களுக்கு மிகுந்த உபத்திரவம் கொடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. 13


யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை
மருத்துவபீடம்

இறுதியாண்டு
மருத்துவபீட
பரீட்சை - 1991
(ஒக்ரோபர்)

இறுதியாண்டு மருத்துவ பீட பரீட்சை 21.10.91ல் ஆரம்பமாகவுள்ளது.

பதிவாளர்
08131



## சிறு விளம்பரம்

### தேவை

பெண்கள், குழந்தைகள் அனைவரது உடைகளையும் மிகவும் நாகரீகமான முறையில் தானே வெட்டித்தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த பெண் ரெயிலர் உடன் தேவை. நேரில் வரவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
'திருமகள் தையல் நிலையம்' கல்வியங்காடு சந்தை அருகில் உள்ள பெற்றோல் செட் முன்பாக) கல்வியங்காடு சந்தை, கல்வியங்காடு.

08125


## படிவங்களுக்குப் பற்றாக்குறை

யாழ் கல்வித் திணைக்களத்தில் ஆசிரியர் சம்பளத்தைத் தயாரிப்பதற்கான சம்பளப் பத்திரங்கள் போதியளவு இல்லாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இச்சம்பளப் பத்திரங்களை வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சில் இருந்து பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (15)

## பிரான்பற்று உற்சவம்

பிரான்பற்று ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 15 ஆம் திகதி வியாழக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இம்மாதம் 24ஆம் திகதி சனிக்கிழமையன்று தேர் உற்சவமும், மறுநாள் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன

## மீன் பதனிடல்

தற்பொழுது குடாநாட்டைச் சுற்றியுள்ள கடலிலிருந்து பெருமளவில் சூடை மீன் வகைகள் பிடிக்கப்படுகின்றன. சாதாரண காலங்களில் பெறப்படும் மீனில் உடனடியாகச் சந்தைப்படுத்தப்பட்ட மீன்போக ஏனையவை உப்பிட்டு உலர்த்தப்பட்டுக் கருவாடாகச் சேமிக்கப்பட்டன அத்துடன் ஒரு பகுதி குளிரூட்டப்பட்டுத் தூர இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வந்தது.

இன்றைய சூழ்நிலையில் எரிபொருள் மற்றும் உப்பு என்பனவற்றிற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக இம்முயற்சிகள் பெருமளவு பின்னடைந்துள்ளன. இதனால் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளோர் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே பிடிபடும் மீனைப் பக்குவப்படுத்துவதற்கு வேறு பாரம்பரிய மற்ற முறைகள் கையாளப்படவேண்டியுள்ளது. மீன் பதனிடல் சம்பந்தமான புதிய முறைகள் பற்றி அறிந்தவர்கள் தமது ஆக்கபூர்வமான கருத்துக்களுடன் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

போர்த்துளி:

### "குப்பி"!

சிப்பிக்குள் முத்திருந்து
சிலிர்ப்பது போல்...
'கொப்பி'க்குள் மட்டும்
உலகைக் கண்ட நாம்...
அதை எறிந்து விட்டு
'குப்பி'யைக் கட்டி-
னோம்!

— வாஞ்சிநாதன்

## அரியாலை வெற்றி பெற்றது

கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம் அதன் 21 வது நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தும் விளையாட்டுப் போட்டிகளில் ஓர் அங்கமாக நடைபெற்ற ஓவர் கேம் முறையிலான கரப்பந்தாட்டப் போட்டியில், அரியாலை விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து ஆடிய சிவன் விளையாட்டுக் கழக அணியை 9:15,15,10, 15:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்தது.

இப் போட்டியில் முதல் செற்றை சிவன் அணி வென்றாலும். அதன் பின் அரியாலை அணி வெகு நிதானமாக ஆடி அடுத்தடுத்து 2 செற்றுக்களையும் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது. வீரன் பரமலிங்கம் வெகு சாதுரியமாக ஆடி ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றார். (16)

## ஓய்வூதியப் படிவம் கச்சேரியில்

விதவைகளுக்கான ஆரம்ப ஓய்வூதியப் படிவம் யாழ் செயலகத்தில் நேரடியாகவே இனிமேல் வழங்கப்படவுள்ளது.

அரசாங்க ஊழியர் ஒருவர் இறந்தால் அவரது ஒய்வூதியத்தைப் மனைவிக்கு மாற்றுவதற்கான இந்த விண்ணப்பப்படிவம் இதுவரை காலமும் கொழும்பில் உள்ள ஓய்வூதியத்திணைக்களத்திலே வழங்கப்பட்டு வந்தது.

இந்த விண்ணப்பப்படிவத்தை பெறுவதற்கு குறித்த விதவைப்பெண்கள், கணவரின் மரண அட்தாட்சிப்பத்திரம், திருமணப்பதிவுப் பத்திரம் என்பனவற்றை கொழும்புக்கு அனுப்பியே இவற்றை பெற்று வந்தனர். 02


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வைரமுத்து யோகராசா

தோற்றம் : 16 - 8 - 48
மறைவு: 20 - 8 - 90

அன்னாரின் ஆத்மா சாந்தியடைக

மனைவி, மக்கள் மைத்துனர்
மைத்துனிமார்,

மல்வம்,
உடுவில்.

08132

★ பாராளுமன்றத்தில் பிரதமர் அறிவிப்பு

# முகாம்களுக்கு வெளியே வசிப்பவர்களுக்கு

# தொடர்ந்தும் உலர் உணவு நிவாரணம்!

அகதிமுகாம்களுக்கு வெளியே வசிப்பவர்களுக்கான உலர் உணவு விநியோகத்தை தொடர்ந்தும் வழங்குவதென அரசு தீர்மானித்துள்ளதாக பிரதமர் டி. பி. விஜயதுங்க பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

முகாம்களுக்கு வெளியே வசிப்பவர்களுக்கான நிவாரணம் நிறுத்தப்படவுள்ளதாக அரசு முன்னர் அறிவித்திருந்தமையும், அதனை ஆட்சேபித்து வடபகுதியின் பல மாவட்டங்களிலும் மக்கள் ஆட்சேபனை ஊர்வலங்களையும், மறியற் போராட்டங்களையும் நடாத்தியிருந்தமையும் தெரிந்ததே.

# 1990இல் நீதிபதிகள் உட்பட 55 வழக்கறிஞர்கள் கொலை

கடந்த வருடத்தில் சுமார் 532 நீதிபதிகளும், சட்டத்தரணிகளும் துன்புறுத்தப் பட்டிருக்கிறார்கள் என்றும் இவர்களில் 55 பேர் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் ஒரு பிரபல ஜூரிகள் நிறுவனம் தெரிவித்தது.

கொலைகளில் அநேகமானவை தென் அமெரிக்காவிலேயே நடைபெற்றுள்ளன. குறைந்தபட்சம் 37நீதிபதிகளும், சட்டத்தரணிகளும் கொலம்பியாவில் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

பெரும்பாலும் இவர்கள் போதைப் பொருள் கடத்தற்காரர்களினாலேயே கொல்லப்பட்டுள்ளனர். படையினரால் கொண்டு வரப்பட்ட குற்றச் சாட்டுக்களை விசாரணை செய்கையிலேயே இவர்களில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

# வடக்கு-கிழக்கு மாகாண அணி

## தேசிய கூடைப் பந்தாட்ட சாம்பியனானது

தேசிய கூடைப் பந்தாட்ட இறுதிப் போட்டியில் வடக்குக் கிழக்கு மாகாண அணி மேல் மாகாண அணியைத் தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளது.

17வது தேசிய விளையாட்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட இப்போட்டியில் வடக்குக் கிழக்கு மாகாண அணி 38 அதிகப்படியான புள்ளிகளைப் பெற்றிருந்தது.

வடக்கு கிழக்கு மாகாணத்தின் சார்பில் மட்டக்களப்பு மாவட்ட அணி இந்த இறுதி போட்டியில் பங்குபற்றியிருந்தது (16)

## தெ. பழையில் கலந்துரையாடல்

தெல்லிப்பழைப் பிரதேச வட்ட அவையைச் சேர்ந்த சகல சிற்றூரவை உறுப்பினர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளை 25 ஆம் திகதி காலை 10மணிக்கு அளவெட்டி மகாஜன மண்டபத்தில் நடைபெறஉள்ளது (27

# காவலாளி பதவிகளுக்கு

## சிற்றூழியர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ் சுகாதார திணைக்களத்தில் காவலாளிகள் பதவிகளுக்கு திணைக்களத்தில் கடமையாற்றும் சிற்றூழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பதவிகள் நிரந்தரமானதாகவும் ஓய்வூதியம் பெறத் தகைமைவாய்ந்ததாகவும் இருக்குமென்றும் தற்போது திணைக்களத்தில் கடமையாற்றும் நிரந்தர தொழிலாளர்கள், இளை மருந்தக பராமரிப்பாளர்கள், மண்டபபொதி தூக்குநர்கள் ஆகிய தரங்களைச்சேர்ந்தவர் இதற்கு விண்ணபிக்கலாம் என்றும், அடுத்த மாதம் 6-ம் திகதிக்கு முன்னர் இதற்கான விண்ணப்பங்களை யாழ் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் இது தொடர்பாக வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (13)

# நல்லூர் நாவலர் மண்டபத்தில் தெய்வீக இசை அரங்கு

நல்லூர் முருகன் மகோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை நடாத்தும் தெய்வீக இசை அரங்கு இம் மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை தினமும் மாலை 4.45 மணி முதல் 7 மணிவரை ஆலய முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

24 ஆம் திகதி சங்கீத வித்துவான் திருமதி நாகேஸ்வரி பிரமானந்தா அவர்களும், 25 ஆம் திகதி மெல்லிசை வாணர் கே சாந்தன் அவர்களும், இசையரசி பார்வதி சிவபாதம் அவர்களும், 26 ஆம் திகதி ஸ்ரீசத்தியசாயி சேவா சமித்தியினரும், 27 ஆம் திகதி சங்கீத பூஷணம் வி.சிவஞானசேகரம் அவர்களும், 28 ஆம் திகதி சங்கீத பூஷணம் கே. ஆர் நடராஜா அவர்களும், 29 ஆம் திகதி சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீவாமதேவன் அவர்களும், 30 ஆம் திகதி சங்கீத பூஷணம் கே. ஆர் நடராசா அவர்களும், 31 ஆம் திகதி சங்கீத பூஷணம் எம். கணபதிப்பிள்ளை அவர்களும், 1ஆம் திகதி சங்கீத பூஷணம் எம் பஞ்சலிங்கம் அவர்களும், 2 ஆம் திகதி சங்கீத பூஷணம் எஸ். திலகநாயகம் போல் அவர்களும், 3 ஆம் திகதி சங்கீத வித்துவான் தனலக்ஷ்மி கணநாதலிங்கம் அவர்களும், 4 ஆம் திகதி சங்கீத வித்துவான் கனகாம்பரி பத்மநாதன் அவர்களும், 5 ஆம் திகதி சங்கீத வித்துவான் செல்வி ராதிகா சுப்பிரமணியம் ஐயர் அவர்களும், 6 ஆம் திகதி சங்கீத பூஷணம் எம்.பாலசிங்கம் அவர்களும், 7 ஆம் திகதி சங்கீத வித்துவான் எம் ராமநாதன் அவர்களும், 8 ஆம் திகதி பண்ணிசைச் செல்வர் நயினை நா.வி. மு.நவரத்தினம் அவர்களும் 9 ஆம் திகதி இன்னிசைவேந்தன் பொன் சுந்தரலிங்கம் அவர்களும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிப்பர்.

# மலையக மக்கள் முன்னணி உறுப்பினர்கள் பலர் விடுதலை!

கூட்டுப்படைத் தலையக குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கென கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்ட மலையக மக்கள் முன்னணி அங்கத்தவர்களில் 20 பேர் விசாரணையின்பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன், செயலாளர்நாயகம் பி. ஏ. காதர், உபதலைவர் வி.டி. தர்மலிங்கம் ஆகியோர் தொடர்ந்தும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# ஆசிரியர்க்கும் ஊக்குவிப்புப்படி வழங்குவதற்கு நடவடிக்கை

அரசஊழியர்களுக்கு 1988-1989 காலப்பகுதிக்குரிய பாதுகாப்பு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டப் பாடசாலைகளில் கடமை புரியும் சகல நிரந்தர ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் இக்கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

01- 01- 88 தொடக்கம் 04- 07- 89 காலப் பகுதியில் கடமையாற்றிய நாட்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன.

சனி, ஞாயிறு பொதுவிடுமுறை நாட்களுக்கு முந்திய தினமோ அன்றேல் அடுத்து வரும் தினத்திலோ வேலைக்குச் சமுகமளித்திருந்தவர்களுக்கு மட்டுமே இவ்விடுமுறைநாட்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனத் தெரிகிறது.

இது தொடர்பாகச் சகல ஆசிரியர்களதும், ஊழியர்களதும் லீவு விவரங்களைத் திரட்டுவதற்காகச் சகல பாடசாலை அதிபர்களுக்கும் மாதிரிப் படிவங்களைக் கோட்டக் கல்வி அலுவலகங்கள் அனுப்பி வைத்துள்ளன (27)

## சென்றோக் வெற்றி பெற்றது

உரும்பிராய் சென் மைக்கல் விளையாட்டுக் கழகம் நடாத்தும் நொக் அவுட் முறையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன் தினம் நடைபெற்ற போட்டியில் யாழ் சென்றோக் விளையாட்டுக் கழகம் அதனை எதிர்த்து மோதிய யுத்காமல் விளையாட்டுக்கழக அணியை ஒழுக்கப் பூச்சியம் என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது. (16)

# வெங்காயம், மிளகாய், இறக்குமதிக்குத் தடை!

பம்பாய் வெங்காயம்) பாசிப்பயறு, செத்தல் மிளகாய் என்பவற்றை இறக்குமதி செய்வதற்கு அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சிறுபோகம் முடியும் வரை இப் பொருள்களுக்கான இறக்குமதித்தடை அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலைகளுக்கு தளபாட உதவி

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சில பாடசாலைகளுக்குப் போரூட் ஸ்தாபனம் தளபாடங்களை வழங்கி வருகின்றது.

இப் பகுதியில் சேதமடைந்த பாடசாலைகளுக்கும் அகதிப் பிள்ளைகளை அதிகமாகச் சேர்த்து இடவசதி பற்றாக்குறை ஏற்பட்டுள்ள பாடசாலைகளுக்குமே தளபாடங்களை இந்த ஸ்தாபனம் வழங்கி வருகின்றது. (18)

# மாஸ்கோவுக்குச் செல்லாதீர்! அமெரிக்கர்களுக்குஎச்சரிக்கை

சோவியத் யூனியனுக்குப் பிரயாணம் செய்யவேண்டாம் என்றும் ஏற்கனவே அங்குள்ள அமெரிக்கர்கள் விரைவி நாடு திரும்பவேண்டுமென்றும் வாஷிங்டன் கூறியுள்ளது.

சோவியத் யூனியனில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்படக் கூடும் என அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு எச்சரித்துள்ளது.

## புதிய சைக்கிள் பரிசு

திட்டமிட்டபடி இம்மாதம் 31 ஆம் திகதி சைக்கிள் ஓட்டப்போட்டி நவாலி வடக்குச் சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்படவுள்ளது.

இப் போட்டியில் புதிய லுமாலா சைக்கிள், கைக்கடிகாரம் உட்படப் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

# பள்ளிவாசலின் முன் கைகலப்பு!

# பல முஸ்லிம்கள் காயம்

பேருவளை, எகொடவத்தை பள்ளி வாசலின் முன் கடந்த ஞாயிறு இரவு இரு சாராருக்கிடையில் ஏற்பட்ட வாக்கு வாதம் கைகலப்பாக மாறியதால் கடந்த நான்கு தினங்களாக அப்பகுதியில் அமைதியின்மைநிலவுகின்றது,

கைகலப்பின் போது காயமடைந்த பல முஸ்லிம்கள் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# இனப்பிரச்சினை தீர்வுக்குழுவில் 43 பாராளுமன்ற உறுப்பினர்கள்

இனப்பிரச்சினைத் தீர்வுத் தெரிவுக் குழுவில் 43 பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகித்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர்களில் 20 பேர் எதிர்க்கட்சிகளையும், 23 பேர் ஆளுங்கட்சியையும் சேர்ந்தவர்கள்.

வடமராட்சி கிழக்கில்

## சில பாடசாலை மாணவருக்கு முத்திரை கிடைக்கவில்லை

வடமராட்சி கிழக்கு பகுதியில் உள்ள சில பாடசாலைகளின் மாணவர்களுக்கு மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய மதிய உணவு முத்திரைகள் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது

வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கை காரணமாக இவற்றை வழங்கத் தாமதம் ஏற்பட்டுள்ளதாக பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை உடுத்துறை, கொத்தணியில் உள்ள சில பாடசாலைகளில் மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய மதிய உணவு முத்திரைகளை அப்பாடசாலைகளிலிருந்து எடுக்க முடியாதுள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. 24

## யாழ் குடாநாட்டு தபால்கள் கொழும்பில் தேங்கியுள்ளன

கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக யாழ் குடாநாட்டுக்குரிய தபால்கள் கொழும்பில் இருந்து அனுப்பப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவு யுத்தம் ஆரம்பித்த பின்னர் பல கப்பல்கள் வடக்கே வந்தபோதிலும் இவற்றை அனுப்ப தபால் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் கொழும்பில் இவை தேங்கியிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. 06

## ஒரு மாதகாலம் மேலும் நீடிப்பு

அவசர காலச் சட்டம் மேலும் ஒரு மாதகாலத்துக்கு 55 மேலதிக வாக்குகள் ஆதரவினால் நீடிக்கப்பட்டுள்ளது

கால நீடிப்பு பிரேரணை சபையால் விவாதத்துக்கு எடுக்கப்பட்ட சமயம் எதிராக 62 வாக்குகள் மட்டுமே அளிக்கப்பட்டன.

## இன்று தேர்

வேலணை பெருங்குளம் அருள்மிகுமுத்துமாரி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று காலை 8 மணிக்கு நடைபெறுகின்றது. (19)

### சுப்பிரமணியம்...

ளாராம். ஸ்ரீலங்கா அரசால் இவர்களை பிடிக்க முடியாவிட்டால் இந்தியா தமது படைகளை அனுப்பி கைது செய்ய முயற்சிக்க வேண்டும் எனவும் அவர் விரும்புகிறாராம்.

### உயர்தர...

விக்கின்றது.

கடந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு யாழ்ப்பாணம்முல்லைத்தீவு கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து8900 பரீட்சார்த்திகள் தோற்றவிருந்ததாகவும் அவர் தெரிவித்தார். 06

### பீரங்கித்...

ஸ்ரீலங்கா விமானப்படை அவசரமாக சீன எப். 85 விமானங்களை கொள்வனவு செய்ய வேண்டியேற்பட்டது.''

விமானப் படையைச்சேர்ந்த உயரதிகாரி ஒருவர் இத்தகவலை கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

''விமானப் படையினால் ஆனையிறவு முற்றுகையை முறியடிக்க முடியாது என்று உணர்ந்ததினால்வெற்றிலைக் கேணியில் இராணுவத்தை தரையிறக்க வேண்டியேற்பட்டது'' எனவும் அவ்வதிகாரி குறிப்பிட்டார்.


இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை

ஆயுள்வேத சித்த வைத்திய அதிகாரிகள்

சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் பொறுப்பில் எமது கிளையூடாக செயற்படவுள்ள வைத்திய அதிகாரிகள் கைதடி அரச சித்தவைத்திய நிலையத்துக்கு அவசியமாகவுள்ளது தகைமையுடையோர் தமது விண்ணப்பங்களை 1991-08-28 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்கவும். இதற்கான நேர்முகப் பரீட்சை 1991-08-29 ஆம் திகதி காலை 9 மணிக்கு எமது பணிமனையில் நடைபெறும்.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்
இலங்கை செஞ்சிலுவைச் சங்க
யாழ்ப்பாணக் கிளை

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
1991.08.22

08133


★ கருத்தரங்கில் பேராசிரியர் சிவத்தம்பி

## சகல மக்களும் இணைந்துள்ள போராட்ட[ம்]

## நீண்டகாலத்துக்கு அதிக பயனைத் தரு[ம்]

''அடக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில் நடாத்தும்எதிர்ப்பேபோராட்டம் எனப்படுகிறது ஒருதேசிய இனம் அரசு ஆவதற்குரிய அடிப்படை உரிமையே சுயநிர்ணய உரிமை எனப்படும்.

தமிழீழ தேசிய ஆசிரியர் ஒன்றியத்தினால் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடாத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க்கால ஆய்வுக் கருத்தரங்கில் ''இன்றைய சர்வதேச நிலைவரமும் தேசிய இனங்களின் பிரச்சினையும்'' என்னும் பொருள் பற்றிக் கருத்துரை வழங்கிய பேராசிரியர் கா. சிவத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

இவ் ஆய்வுக் கருத்தரங்கு திரு எல். அருணாசலம் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய அவர்.

தேசிய இனப்பிரச்சினை என்பது ஒரு நாட்டிலுள்ள இனங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினையாகும். நீண்டகாலமாக இருந்து வந்த தடைகளை விடுவிப்பது பிடியில் இருந்து விடுபடுவது - அடக்குவதை மாற்றுவது போன்றனவற்றை போராட்டத்தின் மூலமே நீக்கலாம்.

இனக்குழுமங்கள் என்பன பண்பாட்டு அடிப்படையில் மொழியால் இனத்தால் சேர்கின்றன. சகல மக்களும் இணைந்துள்ள போராட்டமே அதிக பயனை நீண்டகாலத்திற்குத் தரும்'' என்றார்.

திரு. திருநாவுக்கரசு ''தமிழீழப் போராட்டமும் இலங்கைஅரசின் வெளியுறவுக் கொள்கையும்'' என்னும் பொருள் பற்றிப் பேசும் போது, ''இராணுவ ரீதியான விடுதலைப் புலிகளை இலங்கை அரசானது எந்தக் காலத்திலும் அழிக்க முடியாது இந்தியாவில் தி. மு க, அ. தி. மு க. ஆகியவற்றின் பாரம்பரியம் போன்று இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பாரம்பரியமும் உண்டு.

இலங்கையில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிரஏனைய இயக்கங்களான ஈ பி. ஆர்.எல்.எப்., ரெலோ புளொட் முதலானவை, எல்லாம் துரோகிகள் [...] காட்டியது இந்தியாவே[...]

இந்தியாவானது இங்[...] இயக்கங்கள் பற்றி ஆரா[...] புலி இயக்கமே பரிசுத்த[...] விடுதலை இயக்கம் ஏ[...] யவை எல்லாம் துரோகி[...] எனத் தனது கணி[...] வெளிக்காட்டியுள்ளது. [...] ளோடு மக்களாக இ[...] துள்ள இந்த இயக்கத்[...] எந்த நாட்டினாலும் - [...] அரசினாலும் -யாரா[...] இலங்கையில் இருந்து எ[...] காலத்திலும் அகற்ற - அ[...] முடியாது என்பது நம்பிக்[...] என்றார். 1[...]

## சோவியத் வெளியுறவு அமைச்[சர்] ராஜினாமா அறிவிப்பு

சோவியத் வெளியுறவு அமைச்சர் பெஸ்மெஸ்ரிக் ராஜினாமா செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவரின்ராஜினாமாவைஜனாதிபதி கொர்பசேவ் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதேவேளை சோவி[...] குடியரசுகளில் ஒன்றான உ[...] பெக்கிஸ்தான் குடியரசின் தலைவரும் ராஜினாமா செய்துள்ளதாகத் தெரிவிக்கப்[படு]கிறது.

## 65 கோடி ரூபா இழப்பீடு!

மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச்சபை டிப்போக்களில் கடமை புரிந்த ஊழியர்களுக்கு இதுவரை 64 கோடி 90 லட்சம் ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது:

8300 சாரதிகள், 8600 நடத்துனர்கள்,6000 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உட்பட மொத்தம் 29 ஆயிரம் ஊழியர்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சபை டிப்போக்களில் கடமை புரிகின்றனர்.

மொத்தம் 80 கோடி ரூபா பெறுமதியானசொத்துக்களை இவ் டிப்போக்கள் கொண்டுள்ளன.

### ஊழியர்கள்...

களாக மிக கஷ்டத்தின் மத்தியிலும் கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதே போல கிராமங்களில் இயங்கும் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கும் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. 17

### மாவனைக்கு...

றுக்களில் 100, 250 கிராம் என்ற அடிப்படையில் விற்பனை செய்து வருவதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

சுகாதாரத்துக்கு இதனால் தீங்கு ஏற்படும் என சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர். (01)

## விளையாட்டு வினையானது

துப்பாக்கி குண்டினை எடுத்து விளையாட்டாக குத்தி விளையாடியபோது அது வெடித்தது இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று மாலை யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் இடம் பெற்றது [...] ராஜன் (16) என்ற இளை[...] ஞன் நெஞ்சில் படுகா[...] துடன் வைத்தியசாலையி[ல்] அனுமதிக்கப்பட்டுள்ளார். (0[...])

## தபாலகம் இடமாற்றம்

பளை தபால் அலுவலகம் தற்பொழுது கொடிகாமத்தில் தற்காலிகமாக இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (06)

### மண்டைதீவு...

நீரில் மூழ்கி இறந்தவரின் பெயர் விவரங்கள் செய்தி அச்சுக்குப் போகும்வரை அறியமுடியவில்லை.

இக்குண்டுத் தாக்குதலில் அப்பகுதியில் பொருள்களை ஏற்றிய நிலையில் நின்ற ஒரு வாகனம் முற்றாக சேதத்திற்குள்ளானது வேறு இரு வாகனங்களும் சேதமாகின.

விமானத்தாக்குதல் நடாத்தப்பட்ட பொழுது பண்ணை வீதியூடாக பயணம் செய்த பொதுமகக்கள் பலர் கடலில் குதித்ததில் சிலர் சிறு காயங்களுக்குள்ளானார்கள்.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட குண்டுகளில் இரண்டு வெடிக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இதே நாளில் தான் கோட்டையை மீட்பதற்கான தீவுப் பகுதியில் ''ஒப்பரேஷன் போர்ட்'' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது 01,06, 25 19

## முதலுதவிவகு[ப்பு]

மல்லாவியில் சென். ஜோ[...] அம்புலன்ஸ் முதலுத[வி] பயிற்சி வகுப்பு நடைபெ[ற்று] வருகின்றது. (1[...])

## பாலம் பணியக[ம்] அழைப்பு

ஆனையிறவில் காயமடை[ந்த] போராளிகளுக்காக 1991[...] 11 ஆம் திகதி முதல் [...] ஆம்திகதிவரையாழ்போத[னா] மருத்துவமனையில் இரத்[...] தானஞ் செய்த அனைவ[...] யும் 26 ஆம் திகதி கா[லை] 9.30 மணி முதல் மால[ை] 3.00 மணிவரை பால[ம்] பணியகத்திற்கு வந்து இரத்[...] தான அடையாள அட்[டை]களைப் பெற்றுக்கொள்[ளு]மாறு பாலம் பணியக[த்தி]னர் கேட்டுக் கொள்கின்[ற]னர்.

### ஆலய..

டால் எதிர்காலத்தில் கட[...] அரிப்புக்குள்ளாக வேண்டிவ[...] மெனவும் இதனால் உட[...] மரங்கள் வெட்டுவதனை[...] நிறுத்தும்படியும் ஆலய ப[...] பாலனசபையினர் கேட்டுள்[ள]னர். (0[...])

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 24.08.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.